## திருவண்ணாமலை, வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்– திரு.க. முருகன்,பி.எஸ்ஸி(விவ).,எம்பிஏ.,பிஜிடிஜெஎம்சி.,

எண்.அ2/ 2848/2019 நாள்.28 .02.2020

பொருள்– பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைத்தால் தொகுதி–4ல் அடங்கிய பணிகளுக்கு – நேரடித் தேர்வு மூலம் 2015–16, 2016–17 மற்றும் 2017–18 ஆம் ஆண்டிற்கான தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப்பட்டவர்களுக்கு நியமன ஆணைகள் வழங்கியது – தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை– 1. சென்னை–5, வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மைக் கூடுதல் இயக்குநர் (பணி மேலோண்மை) செயல்முறைகள் எண். அநிபி.3/ 7551 /2019, நாள்.01.03.2019.

2. இவ்வலுவலகச் செயல்முறைகள் எண்.அ2/2848/2019, நாள்.06.03.2019

––––

ஆணை :–

பார்வை 1–ல் காணும் செயல்முறைகளின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் 2015–16, 2016–17 மற்றும் 2017–18 ஆம் ஆண்டிற்கான தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.19500–62000 (புதிய ஊதிய விகிதம்) என்ற ஊதிய விகிதத்தில் தட்டச்சர்களாகப் பணி நியமன ஆணை வழங்கிடும் பொருட்டு, இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட, ஏழு (7) தேர்வர்களுக்கு பார்வை 2–ல் காணும் செயல்முறைகளின்படி தட்டச்சர் பணிநியமனம் வழங்கப்பட்டு, பணியில் சேர்ந்து கொண்டதையடுத்து, ஆறு (6) பணியாளர்களுக்கும் தட்டச்சர் பதவியில் கீழ்க்குறித்த விவரப்படி பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி ( திருவாளர்கள்) | பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | எஸ். வள்ளி, தட்டச்சர் | வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், திருவண்ணாமலை. | 13.03.2019 முற்பகல் | 13.03.2019 முற்பகல் |
| 2. | எம்.தனலட்சுமி, தட்டச்சர் | வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், வந்தவாசி | 21.03.2019 முற்பகல் | 21.03.2019 முற்பகல் |
| 3. | சி. பிரவீனா, தட்டச்சர் | வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், மேற்கு ஆரணி. | 11.03.2019 முற்பகல் | 11.03.2019 முற்பகல் |
| 4. | எம். கலைவாணி, தட்டச்சர் | வட்டார வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்), திருவண்ணாமலை. | 11.03.2019 முற்பகல் | 11.03.2019 முற்பகல் |
| 5. | ஆர். குமரிலேகா, தட்டச்சர் | வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், புதுப்பாளையம். | 11.03.2019 முற்பகல் | 11.03.2019 முற்பகல் |
| 6. | பா. தேவி, தட்டச்சர் | வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், திருவண்ணாமலை. | 11.03.2019 முற்பகல் | 11.03.2019 முற்பகல் |

மேற்காணும் பணியாளர்களை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில், இரண்டாண்டுகளை தகுதிகாண் பருவத்தில் வைத்தும், இவர் தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான உத்தரவு வழங்கிய பின்னரே இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்த ஊதிய உயர்வுகள் வழங்கப்படும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

மேற்காணும், பணிவரன்முறை உத்தரவு மாண்புமிகு, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் நிலுவையில் உள்ள தொகுதி 4ல் அடங்கிய பணிகளில் 2015–16, 2016–17 மற்றும் 2017–18 வரையிலான காலங்களில் வழங்கப்பட்ட பணிநியமனங்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது.

(ஒம்)க.முருகன்,
வேளாண்மை இணை இயக்குநர்
திருவண்ணாமலை.

பெறுநர்

மேற்படி பணியாளர்கள்.
நகல் –வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள், வந்தவாசி, , மேற்கு ஆரணி மற்றும் புதுப்பாளையம்
நகல்–வேளாணமை துணை இயக்குநர்(உழவர் பயிற்சி நிலையம்), திருவண்ணாமலை
நகல்– வேளாண்மை இயக்குநர், சென்னை – தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது (அநிபி.3 பிரிவு)
நகல்– அ2 பிரிவு இருப்பு கோப்பிற்கு.

// உத்திரவுப்படி //

2/3/20
ஆட்சி அலுவலர்

/20